DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No.69/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 2 | நாள் | : | 31.07.2025 |
| பெயர் | : | முருகையா | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 31st day of July 2025.

எதிரிகள் ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது நெற்கட்டும்செவல் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இறந்துபோன தங்கதுரையை எனக்கு தெரியும். சுமார் 9 அல்லது 10 வருடத்திற்கு முன்னாடி சித்திரை மாதம் செவ்வாய்க்கிழமைக்கு முதல்நாள் நாங்கள் அறநிலைய துறை அதிகாரிகளிடம் திருவிழாவை அமைதியாக நடத்தும்படி கேட்டோம். நாங்கள் 4 பேர் சென்று கேட்டோம், அவர்கள் நீங்க ஊருக்கு போங்க, நாங்கள் வருகிறோம் என்று கூறினார்கள். நாங்கள் வந்த பின்னர்தான் நீங்கள் கோவிலுக்கு வரவேண்டும் என்று சொன்னார்கள். செவ்வாய்க்கிழமை அன்று காலை 7.00 மணி

முதலே அரண்மனைக்கு உள்ள மண்டபத்தில் சுமார் 10 நபர்கள் அறநிலைய துறை அலுவலர்கள் வரவேண்டும் என்று காத்திருந்தோம். ஆனால் அறநிலை துறை அலுவலருக்கு போன் போட்டோம். சங்கரன்கோவில் அருகே வந்து கொண்டிருப்பதாகவும், ஊருக்கு வந்ததும் தகவல் சொல்வதாக அறநிலை துறை அலுவலர் கூறினார்கள், அதன் பின்னர் அழைபேசியை எடுக்கவில்லை. பின்னர் சுமார் 1/2 மணிநேரத்திற்குள் கோவிலுக்கு சென்றோம், கோவிலில் வேட்டு சத்தம் கேட்டதால் அங்கு சென்றோம். கோவிலுக்கு தெற்கே உள்ள ரைஸ் மில் அருகே சென்று கொண்டிருக்கும்போது பாண்டியராஜன் வகையறாவினர் ஓடிவந்தார்கள், கொச்சையான வார்த்தைகளை பேசி, இத்தோடு பயல்களை எல்லாம் அடித்து கொல்லுங்க, இவர்கள் தான் எப்போதும் பிரச்சனைக்கு வருகிறார்கள் என்ற கூறிகொண்டு வந்தார்கள், வரும்போதே மாரிச்சாமி, தங்கதுரையின் தலையில் கம்பியால் அடித்தார். லெட்மணபாண்டி மகன் மாரிச்சாமி கூட்டத்தில் இருந்து அரிவாளை வாங்கி என் கையில் வெட்டிவிட்டார், அதன் பின்னர் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது, பின்னர் சங்கரன்கோவில் மருத்துவமனைக்கு என்னை கொண்டு சென்றுள்ளார்கள். மருத்துவமனையில் வைத்து போலீஸார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அதன் பின்னர்தான் எனக்கு மயக்கம் தெளிந்தது. என்னை போலீஸார் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.1 என் தூரத்து உறவு முறையில் என் மைத்துனர். போலீஸார் விசாரணையில் அறநிலை துறை அலுவலர்கள் அமைதியாக திருவிழாவை நடத்தி தரும்படி கேட்டேன் என்று நான் கூறவில்லை என்றால் சரியல்ல. அறநிலை துறை அலுவலர்கள் வந்த பின்னர்தான் நாங்கள் கோவிலுக்குள் வரவேண்டும் என்று கூறினார்கள் என்பதை ஆய்வாளர் விசாரணையில் கூறவில்லை. செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியில் இருந்து அரண்மனைக்கு அருகில் உள்ள மண்டபத்தில் நாங்கள் காத்திருந்தோம் என்று ஆய்வாளர் விசாரணையில் கூறவில்லை. நாங்கள் அறநிலை துறை அலுவலரிடம் நாங்கள் அழைப்பேசியில் கேட்டபோது சங்கரன்கோவிலுக்கு வந்துவிட்டதாக கூறினார்கள் என்றும், அதன் பின்னர் ஊருககு வந்தததும தகவல் சொன்னார்கள் என்றும், அதன் பின்னர் போன் போட்ட போது எடுக்க வில்லை என்றும், போலீசார் என்னை விசாரித்தபோது கூறியிருக்கிறேனா என்றால் இல்லை. கோவிலில் வேட்டு சத்தம் கேட்டது என்றும், வேட்டு சத்தம் கேட்ட பின்னர் நாங்கள் கோவிலுக்கு சென்றோம் என்று போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் இல்லை. என்னை யார் தாக்கி காயப்படுத்தினார் என்று நான் முதல் விசாரணையில் கூறிய நபரைதான் போலீஸார் விசாரணையிலும் கூறியிருக்கிறேன். எங்கள் ஊரில் வெள்ளத்துரை, உள்ளமுடையார், மாரிச்சாமி என்ற பெயர்களில் பலரும் உள்ளார்கள் என்றால் சரிதான். எங்கள் ஊரில் உள்ள கோவில் காளியம்மன்

கோவில், பொதுவாக சித்திரை திருவிழா நடைபெறும், அதற்கு முன்பு நடைபெறவில்லை. கோமதி முத்துராணி என்பவர் எங்கள் ஊரில் இருக்கிறார், அவரது கணவர் பெயர் பாண்டியராஜா. கோமதி முத்துராணி, பாண்டியராஜா வகையறா வழக்கில் நான் 5ம் எதிரி என்றால் சரிதான். காளியம்மன் கோவிலில் கோமதி முத்துராணி தனக்கு முதல் மரியாதை வேண்டும் என்று கேட்டார் என்றால் கேட்கவில்லை. நெற்கட்டும்செவல் காளியம்மன் கோவிலில் நடக்கும் பிரச்சனை என்னவென்று எனக்கு தெரியும். பல ஆண்டுகளாக சம்பவத்திற்கு முன்பு அந்த பிரச்சனை தொடர்பாக சமாதானம் கூட்டம் காவல்நிலையம், வட்டாட்சியர் அலுவலகம், கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடந்தது, அதில் நானும் கலந்து கொண்டேன். கோமதி முத்துராணியின் வீட்டில் இருந்து கோயில் மேளத்தை பயன்படுத்தி, ஊர்வலமாக கோவிலுக்கு அவரை அழைத்து செல்ல வேண்டும் என்ற மரியாதையை கேட்டார் என்பதால்தான் சமாதானம் கூட்டங்கள் நடைபெற்றது என்றால் சரியல்ல. அந்த கூட்டங்களில் கோமதி முத்துராணியை ஊர் மக்கள் அனைவரும் ஊர்வலமாக அழைத்து செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம் என்றால் சரியல்ல. நெற்கட்டும்செவல் ஊரில் உள்ள கோவில்கள் அனைத்தும் அரண்மனை வாரிசான தனக்கு மட்டுமே உள்ளது என்றும், ஊர்மக்களுக்கோ, அரசுக்கோ சொந்தமற்றது என்று கோமதி முத்துராணி கூறினார் என்றால் சரியல்ல. 2016 ஆண்டுக்கு முன்பு இரண்டு வருடமாக மேற்கண்ட பிரச்சனை காரணமாக கோவில் திருவிழா நடைபெறாமல் நின்றுவிட்டது என்றால்

9 ஆண்டுகளாகவே நடைபெறாமல் நின்று விட்டது. சிவகிரி கோட்டாட்சியர் தலைவர் விசாரணையில் நான் கலந்துகொண்டேன். சம்பவத்திற்கு ஒருவருடத்திற்கு முன்பு சிவகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடந்த சங்கரன்கோவில் கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவில் யாருக்கும் முதல் மரியாதை கொடுக்க கூடாது என்றும், பொதுமக்கள் அவரவர் வந்து வழிபட்டு மட்டும் செல்ல வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரியல்ல. அவர் பிறப்பித்த உத்தரவின் மீது கோமதி முத்துராணி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உயர்நீதிமன்றம் அந்த வழக்கை தள்ளுபடி செய்து அறநிலை துறை அலுவலர்கள் கண்காணிப்பில் திருவிழா நடத்த வேண்டும் 29.04.2016 அன்று உத்தரவு பிறப்பித்தது என்றால் அதுவும் எனக்கு தெரியாது. உயர்நீதிமன்றம் உத்தரவின் அடிப்படையில்தான் கோவில் முன்பு சம்பவத்தினத்தன்று பந்தல்கால் நடப்பட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. உயர்நீதிமன்றம் உத்தரவின் படி அறநிலைத்துறை அலுவலர் முன்னிலையில் பந்தல்கால் நடப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கோவிலில் பந்தல்கால் நடுவதற்காகவும், சாமி கும்பிடுவதற்காகவும் 1ம் எதிரி பாண்டியராஜன் வகையறா மற்றும் அவர்கள் சேர்ந்தவர்கள் கோவிலுக்கு பொது மக்களுடன் வந்து கூடியிருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மண்டபம் அரண்மனைக்கு வடப்பக்கம் உள்ளது. அந்த மண்டபம் ஊர் மக்களுக்கு பாத்தியப்பட்டது. அந்த மண்டபத்திற்கு பாண்டியராஜவும், கோமதி முத்துராணியும்

வரவில்லை. அ.சா.1 வெள்ளத்துரைதான் மண்டபத்திற்கு போவோம் என்று அழைத்தார். சுமார் 10-15 நபர்கள் சென்றோம். நாங்க கோவிலுக்கு அருகே சஉள்ள ரைஸ் மில் அருகே செல்லும்போது கோவிலுக்கு சாமி கும்பிட்டு திரும்பியவர்களில் 7 பேரை தாக்கியதாக ஒரு வழக்கு உள்ளது. போலீஸார் விசாரணையில் நாங்களும் எதிரிகள் தரப்பினர் மீது கற்களை வீசி எறிந்தோம் என்று கூறவில்லை. நானும், உடன் பிறந்த அண்ணன் உள்ளமுடையார் என்பவரும், எதிர் தரப்பு சேர்ந்த உள்ளமுடையார் என்பவரை கம்பை பயன்படுத்தி இடது கை புஜத்திலும், இடது தலையிலும் காயப்படுத்தியதாக எங்கள் மீதான வழக்கில் குற்றச்சாட்டு கூறப்பட்டுளளது என்றால் சரிதான். கோவிலில் யாருக்கும் முதல்மரியாதை தரக்கூடாது என்று உயர்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மீறி கோமதி முத்துராணிக்கு முதல்மரியாதை தரப்படவேண்டும் என்று கூறி நாங்கள்தான் ஒரு தரப்பாக சட்ட விரோதமாக ஒன்று கூடி நாங்கள்தான் எதிர்தரப்பை தாக்கினோம் என்றால் சரியல்ல. நாங்கள்தான் அத்துமீறி எதிர் தரப்பை தாக்கி குற்றசெயலுக்கு காரணமாகினோம் என்றும், எதிர்தரப்பினர் எந்தவித குற்ற செயலையும் ஈடுபடவில்லை என்றும், அவர்கள் சாமி கும்பிடுவதற்காக கூடியிருந்தார்கள் என்றால் சரியல்ல. இறந்துபோன தங்கதுரையை 1ம் பிரதிவாதியாக குறிப்பிட்டு கோமதி முத்துராணி தனக்கு முதல் மரியாதை வழங்க வேண்டும் என்றும், தங்கதுரை அதை தடுப்பதாகவும், எனவே உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று சிவகிரி உரிமையியல் நீதிமன்றத்தில்

அசல் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எங்கள் தரப்பினர் அந்த தங்கதுரையை ( இறந்தவர்) கூட்டத்தை பயன்படுததி அவர் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தி அந்த பழியை எதிரி மீது சுமத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் அவரை தாக்கி அதே இடத்தில் போட்டுவிட்டு ஓடிவிட்டோம் என்றும், முதல் உதவி சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றும், எதிரிகள் தரப்பினர்தான் அவரை எதிர்தரப்பினருக்கு ஏற்பட்ட காயம்பட்டவர்களுடன் தங்கதுரையையும் புளியங்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்ற சிகிச்சைக்கு சேர்த்தனர் எனறால் சரியல்ல. தங்கதுரையை தவிர நாங்கள் அனைவரும் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சேர்க்கப்பட்டோம்.

**மறு விசாரணை** : இல்லை

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.07.31 18:22:56 +0530